RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s2137

OPEN ACCESS

# தாய் தெய்வ வழிபாடு

செ. தனபால் [அ, *], பொ. வெங்கடேசன் [அ]

[அ] தமிழ்த்துறை, கந்தசாமி கண்டர் கல்லூரி, பரமத்திவேலூர்-638182, தமிழ்நாடு, இந்தியா.

# Worshipping Goddess as Mother in Tamil Literature

S. Dhanapal [a, *], P. Venkatesan [a]

[a] Department of Tamil, Kandaswami Kandar's College, Namakkal-638182, Tamil Nadu, India

* Corresponding Author:
sjdhanapalmphil@gmail.com

Received: 13-08-2022
Revised: 20-10-2022
Accepted: 27-10-2022
Published: 15-11-2022

Check for updates

**ABSTRACT**

Human beings are afraid of natural disaster and that is how humans began to worship nature. So, man first started worshiping nature and gradually they started believing that all the things that happens in this world are caused by an invisible divine power. There the worship of man began. Based on the fact that every natural object has a power, the methods of worshiping the respective deities emerged by setting up abodes for it. Deity worship continues till today based on the feelings of devotion, gratitude and faith. Worshipping a deity will guide a man to lead a better life and it helps to mature the ignorant mind. More and more people are worshiping female deities more than worshipping male deities. Female deities are worshiped in abundance because of their respect for sex and forgiving nature like how a mother forgives her children. Through this we can understand how much importance Tamil people give to women and the worship of Mother Goddess.

**Keywords:** Mother Goddess, Worship, Deity Worship, Female Deities

## முன்னுரை

இயற்கையின் ஆற்றலில் மனிதன் கொண்ட அச்சமே இயற்கையை வழிபடத் தூண்டியது. ஆதலால் இயற்கையை மனிதன் முதலில் வழிபடத் துவங்கினான். பின் இவ்வுலகில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளுக்கும் காரணம் கண்ணுக்குப் புலப்படாத இறைசக்தியே என்கிற நம்பிக்கையே வழிபாட்டின் முதற்கட்டமாக மாறியது. ஒவ்வொரு இயற்கை பொருட்களுக்கும் ஒரு சக்தி உண்டு என்ற அடிப்படையில் அதற்கென இருப்பிடங்களை அமைத்து அதற்குரிய தெய்வங்களை வழிபடும் முறைகள் தோன்றின. தெய்வ வழிபாடானது, இன்றும் பக்தி, நன்றி மற்றும் நம்பிக்கை என்ற உணர்வுகளின் அடிப்படையில் நிலைபெற்று ஓங்கி வளர்ந்து வருகிறது.

## வழிபாடு விளக்கம்

வழிபாடு என்பதன் பொருள் முன்னோர்கள் காட்டிய வழியில் செல்லல் என்பதாகும். அதுவே பின்னர் வழிபடல் என்றாயிற்று. வழிபாடு என்ற சொல் இன்று வணங்குதல், வழிபடுத்துதல், தொழுதல், நெறிபடுத்துதல் என்பதைக் குறிக்கும். பூவால் செய்யப்படுகின்ற புண்ணிய செயல்கள் அனைத்தும் வழிபாடாயிற்று "புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு" (Manikkavasagan, 2006) என்றார் திருமூலர். "மாந்தன் விலங்கு நிலையினின்று மனித நிலையை எய்தி குழுவாகத் திரண்டு நின்றபோது மெல்ல மெல்லச் சிந்திக்கத் தொடங்கிய தன் வெளிப்பாடே வழிபாடு" என கூறுகின்றார் (Aravanan, 2003).

## வழிபாடு தோன்றக் காரணம்

இயற்கையின் ஆற்றலைக் கண்டு அஞ்சிய மனிதன் அதன் சீற்றத்திற்கு ஆளாகாமல் இருக்க விரும்பினான். இயற்கையின் சீற்றங்களான இடி, மின்னல், மழை, எரிமலை, வெள்ளம் மற்றும் கொடிய விலங்குகள் ஆகியவற்றைக் கண்டு அஞ்சி நடுங்கினான். எனவே அவற்றிலிருந்து தன்னை தற்காத்துக் கொள்ள வழிபாடுகளும், விழாக்களும் உருவாயின. இதுவே வழிபாடு தோன்றுவதற்கான காரணமாகக் கருதப்படுகிறது. "இயற்கையிடமும் மரணத்திற்கு பின்வரும் நிலைமையிடமும் மனிதன் கொண்ட அச்சமே வழிபாட்டிற்கு அடிப்படை காரணம்" என்கிறார் (Sakthivel, 2003).

## தெய்வ வழிபாட்டின் வகைகள்

சமூகத்தில் மனிதர்களிடையே உயர்ந்தது, தாழ்ந்தது என்ற பாகுபாடுகள் காணப்படுவதைப் போல மனிதப் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் தெய்வ வழிபாட்டிலும் பெருந்தெய்வ வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு என வழிபாட்டு முறைகள் உள்ளன. "சமயக் கோட்பாட்டின் படி சிறுமரபு ((Little Tradition), பெருமரபு (Great Tradition) என்ற இருவகை மரபுகள் காணப்படுசின்றன." என்கிறார் அவர்கள் (Sakthivel, 2003).

மேலும் அவற்றில் ஆண் தெய்வ வழிபாடு, பெண் தெய்வ வழிபாடு என்றும் இருநிலைகள் உருவாயின. இத்தகைய தெய்வங்கள் மரபு சார்ந்தவையாகவும், எழுத்திலக்கியத்துடன் தொடர்புடையனவாகவும் அமைந்துள்ளன. தமிழ் இலக்கியங்களில் தெய்வ வழிபாடு

"திங்களைப் போற்றுதும! திங்களைப் போற்றதும்!

கொங்கு அலதார்ச் சென்னி குளிர் வெண்குடை போன்றுஇவ்

அம்கண் உலகு அளித்த லான்.

ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும!" என்று அன்றைய மக்கள் இயற்கை வணக்கத்தையே இறைவணக்கமாக்கினர் என்பதனை இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம் மூலம் அறியலாம் (Sarala Rajagopalan, 2002). மேலும் மக்கள் நடுகல் வழிபாடு, உருவ வழிபாடு, குல வழிபாடு, முன்னோர் வழிபாடு, தாய்த்தெய்வ வழிபாடு, சிறு தெய்வ வழிபாடு, பெரு தெய்வ வழிபாடு என பல வகைகளில் தெய்வங்களை வழிபட்டு வருகின்றனர்.

## பெண் தெய்வங்கள்

தெய்வங்களில் ஆண் தெய்வங்களை விட பெண் தெய்வங்களை மக்கள் அதிகமாக வணங்குகின்றனர். பெண் தாய்மைப் பண்புடையவளாகவும், செழிப்புக் குறியீடாகவும் மதிக்கப்படுவதினால் பெண் தெய்வங்களை மக்கள் அதிகம் நம்புகின்றனர். மேலும் ஒரு பெண் இறந்து தெய்வமாகும் போது அவள் தன் பெற்றோரின் குடும்பத்திற்கு முதற் தெய்வமாகவும், கணவர் குடும்பத்திற்கு துணை தெய்வமாகவும் மாறி விடுவதினால் பெண் இருவழியிலும் தெய்வமாகிற தன்மையைக் காண முடிகிறது.

## கொற்றவை வழிபாடு

கொற்றவை என்பது 'கொற்றம' 'அவ்வை' என பாகுபடுத்தப்பட்டு 'கொற்றம்' என்றால் வெற்றியெனவும், 'அவ்வை' என்றால் தாயெனவும் பொருள் கொள்ளப்படுகிறது. எனவே 'கொற்றவை' என்னும் சொல் வெற்றியையுடைய தாயெனவும், வெற்றி தரும் தாயெனவும் பொருள் கொள்ளப்படுகிறது. சிலம்பில் கொற்றவை எயினர்களுக்கும், வேடர்களுக்கும் வெற்றி தரும் வேட்டைத் தெய்வமாகவும், மன்னர்களுக்கு வெற்றியை அளிக்கும் போர்த் தெய்வமாகவும் கூறப்பட்டுள்ளது.

## கொற்றவையின் வேறு பெயர்கள்

கொற்றவைத் தெய்வத்திற்குரிய பல பெயர்களை இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் குறிப்பிடுகின்றார். கொற்றவை, அமரி, குமரி, கவுரி, சமரி, சூலி, நீலி, சங்கரி, அந்தரி, பாய்கலைப் பாவை முதலான பல பெயர்கள் இருப்பதை,

"தலைமிசை நின்ற தையல் பலர்தொழும் அமரி, குமரி,

கவுரி, சமரி சூலி, நீலி மாலவற்கு இளங்கிளை ஐயை

செய்பவள் வெய்யவள் தடக்கைப் பாய்களைப் பாவை

பைந்தொடிப் பாவை ஆய்கலைப் பாவை அருங்கலப்பாவை"

என்று என்னும் வரிகள் குறிப்பிடுகின்றன (Sarala Rajagopalan, 2002). மேலும் ஆகம்பாலுடையாள், திங்கள் வாழ்சடையாள், திருமாற்கிளையாள் என்னும் பெயர்களாலும் கொற்றவை குறிப்பிடுகின்றாள். சிலம்பில் கொற்றவைக் கோயில் "ஐயைக் கோட்டம்" எனக் கூறப்படுவது குறிப்பிடத்தக்கது.

## துர்க்கை வழிபாடு

துர்க்கை என்ற சொல்லுக்கு 'ஆபத்துக்களை நீக்குபவள' என்பது பொருளாகும். துர்க்கம் என்ற சொல்லுக்கு 'கோட்டை' என்றும், 'மலை' என்றும் பொருள் கூறுவர். எனவே மலையில் உறைபவளைத் துர்க்கை என்றும் கூறுவர். இளங்கோவடிகள் 'அந்தரி' என்ற சொல்லால் துர்க்கையை குறிப்பிடுகிறார். இச்சொல்லுக்கு அடியார்க்கு நல்லார் துர்க்கை என்றே பொருள் கூறியுள்ளார்.

## மாரியம்மன் வழிபாடு

பெண் தெய்வ வழிபாட்டில் மாரியம்மன் வழிபாடு முக்கியத்துவம் பெறுகிறது. வெம்மை நோய் போக்கும் தெய்வமாக வணங்கப்படுகிறாள். மாரி என்றால் 'மழை' என்று பொருள். மழை புவி வெம்மையைக் குறைப்பது போல் இத்தெய்வம் வெம்மை நோயைப் போக்குவதாக மக்கள் நம்புகின்றனர். மாரியம்மன் வழிபாட்டில் மஞ்சளும், வேம்பும் கிருமிநாசினியாக முக்கியத்துவம் பெறுகிறது. "மாரியம்மன்சில இடங்களில் எல்லை காப்பவளாக இருந்து, எல்லையம்மன் எனப்பெயர் பெறுகிறாள். அவளே கன்னிகா பரமேசுவரி என்றழைக்கப்படுகிறாள். தலை மட்டுமே கொண்டவளாக இருந்து இரேணுகாதேவி அம்மனாக வழிபடப்படுகிறாள். பல இடங்களில் உயிர்கள் தொழுகின்ற மழைத் தெய்வமாக, மாரியம்மனாக மாரியத்தாளாகக் காட்சியளிக்கிறாள். உக்கிரத் தேவதையாகக் காளியம்மனாகக் கருதப்படுகிறாள்" (Sarala Rajagopalan, 2002).

## காளியம்மன் வழிபாடு

காளியம்மன் என்பவள் கோப உருவம் உடையவள். தாய் பராசக்தியின் அம்சம். "காளியானவள் பராசக்தியின் உடலிலிருந்து தோன்றியதால் கௌசிகை என்றும், கருமை நிறத்துடன் பார்க்க அஞ்சும் கோலத்தில் பத்திரகாளி என்றும், அசுரர்களுக்கு அச்சத்தைத் தருபவளாக இருந்ததால் காளகத்திரி என்றும் பெயர் பெற்றதாக இந்திய புராணங்கள் கூறுகின்றது." (Balusamy, 2005)

தமிழகத்தில் பல கிராமங்களில் எல்லையம்மன் வழிபாடு சிறப்பாக நடைபெற்று வருகிறது. எல்லையம்மனைக் குறிக்கும் கற்களோ அல்லது கோயில்களோ கிராமங்களின் எல்லையைக் குறிக்கும் இடத்தில் இருக்கின்றன. இக்கோயில்களின் அமைவிடங்களைக் கொண்டே இரண்டு கிராமங்களுக்கான எல்லையை நாம் அறியலாம். இந்த எல்லையம்மன்களை ஊர் காவல் தெய்வங்களாகவும், கிராம தேவதைகளாகவும் மக்கள் வணங்குகின்றனர்

"வெள்ளியிலே விளக்கேத்தி வைச்சி நேராத கோவிலுக்கு

நெய்த்தீபம் ஏத்துனாளோ காணாத கோவிலுக்கு கற்பூரத்

தீபமிட்டு தூரத்து கோவிலுக்கு சுடர்விளக்கு ஏத்துனாளோ"

என்று நாட்டுப்புற பாடல்கள் சுட்டுகின்றன. இவற்றிலிருந்து நாட்டுப்புற மக்கள் கோவில் வழிபாட்டின் போது நெய்தீபம், கற்பூரம், சுடர்விளக்கு ஏற்றி வைத்து வழிபடுவதை அறிய முடிகிறது (Sarala Rajagopalan, 2002).

## தங்காயி வழிபாடு

அண்ணமார் கதையானது 'குன்றுடையான் கதை' என்றும் அழைக்கப்படுகிறது. இதில் பொன்னர், சங்கர் மற்றும் தங்காயி ஆகியோர் வரலாறு பற்றி கூறப்பட்டுள்ளது. மேலும் இக்கதையில் உத்தம பத்தினியாக தங்காயி சித்தரிக்கப்பட்டுள்ளாள். அண்ணன்மார்கள் இறந்த செய்தியறிந்த தங்காயி அவர்கள் இறந்த படுகளம் போய் புலம்புகிறாள்.

"ஒக்கப் பிறக்கணுமா - அண்ணா

ஒரு முலைப்பால் உண்கணுமா

கூடப்பிறக்கணுமா? அண்ணா

கூட்டுப்பால் உண்கணுமா" (கொங்கு நாட்டுப்புற இலக்கியம்) எனும் கதைப்பாடல் எங்கும் பரவியுள்ளது (Sarala Rajagopalan, 2002).

## முடிவுரை

வழிபாடு என்பது மனிதனை நல்வழிப்படுத்துவதாகும். புக்குவமற்ற மனதைப் பக்குவப்படுத்த உறுதுணையாக இருப்பது இவ்வழிபாடு. ஆண் தெங்வங்களை விட மக்கள் அதிகம் பெண் தெய்வங்களுக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்து வணங்கி வருகின்றனர். பேண்கள் மதிக்கப்படுவதாலும், தாய்மைக்கு மன்னிக்கும் குணம் இருப்பதினாலும் பெண் தெய்வங்கள் மிகுதியாக வணங்கப்படுகின்றனர். இதன் மூலம் தமிழர்கள் பெண்களுக்கு எந்த அளவு முக்கியத்துவமளிக்கின்றார்கள் என்பதனையும், தாய் தெய்வ வழிபாடு பற்றியும் நம்மால் நன்கு உணர முடிகின்றது.

## References

Aravanan, K.P. (2003) Tamilar Ilakkiya samooga thalangal, Tamil kottam, Chennai, India.

Balusamy, (2005) Valviyal Kalanjiyam, Tamil University, Thanjavur, India.

Manikkavasagan, G. (2006) Thirumoolar Aruliya Thirumanthiram, Uma Pathippagam, Chennai, India.

Ramanathan, R. (1991) Folklore Studies, Tamil University, Thanjavur, India.

Sakthivel, S. (2003) Naattuppura eyal aaivu, Manivasagar publications, Chennai, India.

Sarala Rajagopalan, (2002) Sanga Ilakkiyam, Oli Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License